# SRI LANKA EXPORT DEVELOPMENT BOARD
# ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන මණ්ඩලය
# இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

## கைத்தொழில் மற்றும் தொழில் முனைவு அபிவிருத்தி அமைச்சு

# வெற்றிடங்கள்

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (EDB), ஏற்றுமதி மேம்பாட்டிற்கு பொறுப்பான முதன்மையான வர்த்தக அரசு நிறுவனமாகும் என்பதுடன் அரசாங்கத்தின் ஏற்றுமதிகளை அபிவிருத்தி செய்வதிலும் மேம்படுத்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. நாடு அதிக அந்நியச் செலாவணியை ஈட்டும் வகையிலும், தனியார் துறையினர் தங்கள் ஏற்றுமதி திறனை அதிகரிக்க உதவுவதற்கும் மற்றும் வழிகாட்டுவதற்குமான உத்திகள் மற்றும் திட்டங்கள் ஏற்கனவே நடைமுறையில் உள்ளன. இலங்கையின் ஏற்றுமதியில் இத்தகைய வளர்ச்சியை அடைய, சிறந்த தலைமைத்துவ திறன்களைக் கொண்ட சுய-உந்துதல் கொண்ட வல்லுநர்களை EDB நிர்வாகக் குழு மற்றும் ஒத்துழைப்பு ஊழியர்களுடன் இணைய அழைப்பு விடுக்கப்படுகின்றது.

### (1) மேலதிக பணிப்பாளர் நாயகம் - நிதி மற்றும் நிர்வாகம் (HM 2-1)

**வெற்றிடங்களின் எண்ணிக்கை (01)**

**தொழில் விபரம்**

நிறுவனத்தின் தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரியினால் ஒப்படைக்கப்படும் நிர்வாகம் மற்றும் நிதியியல் நடவடிக்கைகளுக்கு இயைபாக அதிகாரம்/ கடமைகள் / வேலைகளை செயற்படுத்தும் பொறுப்பு மற்றும் நிறுவனத்தின் சகல பிரிவுகள் / அலகுகளின் நிர்வாகம் மற்றும் நிதியியல் நடவடிக்கைகளுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்குதல்

**தகைமைகள்:**

***வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1, 2 அல்லது 3)***

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் விஞ்ஞானம் / வர்த்தகம் / கலை / கணக்கியல் / மனிதவள முகாமைத்துவம் / விவசாயம் / வியாபார நிர்வாகம் அல்லது இயைபுடைய துறையில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் இயைபுடைய துறையில் பட்டப் பின்படிப்புப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் அல்லது பட்டய கணக்கியல் நிறுவனத்தில் பதவிக்கு இயைபான விடயத்துறை சார்ந்த இணை அங்கத்துவத்துடன் அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் இருபது (20) வருட காலம் முகாமைத்துவ மட்டத்தில் அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் அதில் ஐந்து (5) வருடங்களில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்திலாக இருத்தல் வேண்டும்.
2. பதவிக்கு இயைபான துறையில் பட்டய கணக்காளர் நிறுவனத்தின் முழுமையான அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல் மற்றும் அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் பதினைந்து (15) வருட கால அனுபவம் இருத்தல் வேண்டும்.
3. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் விஞ்ஞானம் / வர்த்தகம் / கலை / கணக்கியல் / மனிதவள முகாமைத்துவம் / வியாபார நிர்வாகம் அல்லது இயைபுடைய துறையில் பட்டமொன்றுடன் இயைபுடைய துறையில் கலாநிதிப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் ஆரம்பப் பட்டத்தின் பின் கூட்டுத்தாபனம் / சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (5) வருட கால அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

***உள்வாரி விண்ணப்பதாரிகள்:***

பதவிக்கு இயைபான விடயத்துறையில் சிரேஷ்ட முகாமைத்துவ வகுதியில் (HM 1-1) பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடம் திருப்திகரமான சேவைக் காலம் / மற்றும் / பல்வேறு துறை குழுக்களை இயக்குவதற்கு மற்றும் தலைமைத்துவத்தை உறுதிசெய்யும் ஆற்றல், மனித மற்றும் ஏனைய வளங்களை முறையாக பயன்படுத்துதல் மற்றும் வினைத்திறனுடன் முகாமைத்துவம் செய்வதில் அனுபவம்.

### (2) மேலதிக பணிப்பாளர் நாயகம் - அபிவிருத்தி (HM 2-1)

**வெற்றிடங்களின் எண்ணிக்கை (01)**

**தொழில் விபரம்**

நிறுவனத்தின் தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரியினால் ஒப்படைக்கப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள், செயற்பாடுகள் மற்றும் தொழில்நுட்ப நடவடிக்கைளுக்கு இயைபான கடமைகள், வேலைகள் / அதிகாரத்தை செயற்படுத்தும் பொறுப்பு மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை தயாரித்தல், செயற்படுத்துதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்குதல்

**தகைமைகள்:**

***வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1, 2 அல்லது 3)***

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் விஞ்ஞானம் / விவசாயம் / வியாபார நிர்வாகம் / பொருளியல் அல்லது இயைபுடைய துறையில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் இயைபுடைய துறையில் பட்டப் பின்படிப்புப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் அல்லது பட்டய கணக்கியல் நிறுவனத்தில் பதவிக்கு இயைபான விடயத்துறை சார்ந்த இணை அங்கத்துவத்துடன் அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் இருபது (20) வருட காலம் முகாமைத்துவ மட்டத்தில் அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் அதில் ஐந்து (5) வருடங்களில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்திலாக இருத்தல் வேண்டும்.
2. பதவிக்கு இயைபான துறையில் பட்டய கணக்காளர் நிறுவனத்தின் முழுமையான அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல் மற்றும் அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் பதினைந்து (15) வருட கால அனுபவம் இருத்தல் வேண்டும்.
3. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் விஞ்ஞானம் / விவசாயம் / வியாபார நிர்வாகம் / பொருளியல் அல்லது இயைபுடைய துறையில் பட்டமொன்றுடன் இயைபுடைய துறையில் கலாநிதிப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் ஆரம்பப் பட்டத்தின் பின் கூட்டுத்தாபனம் / சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (5) வருட கால அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

***உள்வாரி விண்ணப்பதாரிகள்:***

பதவிக்கு இயைபான விடயத்துறையில் சிரேஷ்ட முகாமைத்துவ வகுதியில் (HM 1-1) பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடம் திருப்திகரமான சேவைக் காலம் / மற்றும் / பல்வேறு துறை குழுக்களை இயக்குவதற்கு மற்றும் தலைமைத்துவத்தை உறுதிசெய்யும் ஆற்றல், மனித மற்றும் ஏனைய வளங்களை முறையாக பயன்படுத்துதல் மற்றும் வினைத்திறனுடன் முகாமைத்துவம் செய்வதில் அனுபவம்.

**வயதெல்லை (1) மற்றும் (2) பதவிகளுக்கு:** 35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**சம்பள அளவு :** (HM 2-1) (1) மற்றும் (2) பதவிகளுக்கு:

ரூபா 161,140/- 12 x 4,850 = ரூபா 219,340/-

2025-03-25ஆம் திகதிய முகாமைத்துவ சேவை 01/2025ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் IIஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்.

2025ஆம் வருடத்தில் மாதாந்தம் செலுத்தப்படும் அடிப்படைச் சம்பளம் 119,494.00 ரூபாவாகும்.

2026-01-01ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் 140,317.00 ரூபா. (இதற்குப் புறம்பாக வாழ்க்கைச் செலவுப் படி 17,800.00 ரூபா மற்றும் பதவிக்கு இயைபாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள்)

**ஏனைய அனுகூலம்:**

2016-10-27ஆம் திகதிய பொது நிறுவனத்துறை திணைக்களத்தின் (PED) 1/2025(i) சுற்றுநிருபம் மற்றும் இயைபுடைய திருத்தத்தின் பிரகாரம் வாகனமொன்று வழங்கப்படும். (HM 2-1 மற்றும் HM 1-1 வகுதிகளின் பதவிகளுக்கு மட்டும்)

### (03) பணிப்பாளர் - தகவல் தொழில்நுட்பம் (HM 1-1)

**வெற்றிடங்களின் எண்ணிக்கை (01)**

**தொழில் விபரம்**

நிறுவனத்திற்கு தகவல் தொழில்நுட்ப சேவையை வழங்குதல். வர்த்தக Trade portal ஒன்றைப் பராமரித்தல், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் இணையதளத்தை நாளது தரவேற்றம் (Update) செய்தல் இலத்திரனியல் தொடர்பாடல்கள், e- மேம்பாடுகள் போன்றவை, தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் செயற்படுத்துவதற்கான உத்திகளை திட்டமிடல் மற்றும் தீர்மானங்களை மேற்கொள்ளல், நிறுவனத்தின் தற்போதைய மற்றும் எதிர்கால வியாபார இலக்குகளை பூர்த்தி செய்வதற்குத் தேவையான தீர்வுகளை வழங்குதல், கணனி வன்பொருள், மென்பொருள், பயன்பாடு, பிரவேசம் மற்றும் பெறுகை தொடர்பில் இலத்திரனியல் அரசாங்க கொள்கையின் பிரகாரம் நடைமுறைப்படுத்தல் தகவல் தொழில்நுட்ப கொள்கையை பேணுதல், தகவல் தொழில்நுட்ப வளத்தை திட்டமிடல், வரவு செலவுத்திட்டமிடல், செயற்பாட்டு நடவடிக்கை மற்றும் முன்முயற்சி மற்றும் செயற்றிறன் மற்றும் பெறுபேறுகள் உட்பட பிரிவின் ஒட்டுமொத்த நிர்வாகத்திற்கும் மற்றும் கண்காணிப்பு போன்ற விடயங்கள் பணிப்பாளரின் பொறுப்பாகும்.

**தகைமைகள்:**

***வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)***

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் / கணனி விஞ்ஞானம் / தகவல் முறைமை முகாமைத்துவம் தொடர்பான பட்டமொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் இயைபுடைய துறையில் பட்டப் பின்படிப்புப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் ஆரம்பப் பட்டத்தின் பின் அரசாங்கத் திணைக்களம் / கூட்டுத்தாபனம் / சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் பதினைந்து (15) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.
2. பதவிக்கு இயைபான துறையில் தொழில்சார் பட்டய நிறுவனத்தின் முழுமையான அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல் மற்றும் அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் பதினைந்து (15) வருட கால அனுபவம் இருத்தல் வேண்டும்.

***உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)***

1. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்
2. பதவிக்கு இயைபான விடயத்துறையில் முகாமைத்துவ வகுதியில் (MM 1-1) பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடம் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்

### (04) பணிப்பாளர் - சந்தை அபிவிருத்தி (HM 1-1)

**வெற்றிடங்களின் எண்ணிக்கை (01)**

**தொழில் விபரம்**

சந்தை வலயத்திற்குள் சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல், செயற்படுத்துதல் மற்றும் மதிப்பீடு செய்தல், இலங்கையின் ஏற்றுமதி தொடர்பில் சந்தை வாய்ப்புகளை அடையாளம் கண்டு மதிப்பிடுதல், சந்தைப் பிரிவு ஊழியர்களின் வேலைகளை ஒருங்கிணைத்தல், பணிப்பாளர் குழுவிற்கு வழிகாட்டல்களை வழங்குதல் மற்றும் செயற்படுத்துதல், விற்பனை செயற்பாடுகள், கண்காட்சிகளை நடாத்துதல், விற்பனை கண்காட்சிகளில் கலந்துகொள்ளல், சந்தை தகவல்களை பகிர்தல், வலயங்களில் சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை தயாரித்தல், செயற்படுத்துதல் மற்றும் மதிப்பீடு செய்தலுக்காக இலங்கையின் வெளிநாட்டு தூதுவராலயங்களுடன் ஒருங்கிணைத்தல், வலயத்துக்குள் பிரதான சந்தைகளில் இலங்கை ஏற்றுமதித் துறையின் போட்டித் தன்மையை ஊக்குவிக்கும் வகையில் செயற்படுத்தல், டிஜிட்டல் சந்தைப்படுத்தல் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கு நிர்வாகத் தகவல்களை வழங்குவதன் மூலம் பங்களிப்பு செய்தல் மற்றும் அதன் மூலம் சந்தைகளை விரிவாக்குதல் போன்ற முடிவுகளுக்கு பொறுப்பு கூறல்.

### (05) பணிப்பாளர் - பிராந்திய அபிவிருத்தி (HM 1-1)

**வெற்றிடங்களின் எண்ணிக்கை (01)**

**தொழில் விபரம்**

ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் பிராந்திய அலுவலகங்களின் ஒட்டுமொத்த நிர்வாகத்திற்கும், பிராந்திய மேம்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு வாய்ப்புகளை அடையாளம் கண்டு அபிவிருத்தி செய்வதற்கும் பொறுப்பு கூறல். பிராந்திய அலுவலகங்களின் மூலம் ஏற்றுமதி விநியோக சங்கிலியை விரிவாக்குதல், திறன் மேம்பாடு, கிராமிய மட்டத்தில் ஏற்றுமதி சார்ந்த உற்பத்திகளை அபிவிருத்தி செய்தல் உட்பட அனைத்து பிராந்திய மேம்பாட்டு திட்டங்களையும் செயற்படுத்துவதை திட்டமிடல் மற்றும் கண்காணித்தல், எதிர்காலத்தில் பிராந்திய சிறு நடுத்தர நிறுவனங்களை ஏற்றுமதியாளர்களாக மாற்றுவதற்கு பிராந்தியங்களுக்குள் ஏற்றுமதி உற்பத்தி கிராமங்களை (EPV)/ஏற்றுமதி செயலாக்க வலயங்களை (EPC) நிறுவுதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய மேற்பார்வை செய்தல் மூலம் பிராந்திய அபிவிருத்தி பிரிவின் ஒட்டுமொத்த நிர்வாகத்திற்கும் திட்டமிடல் மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்கும் பொறுப்பு கூறல்.

**தகைமைகள்:**

***வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)***

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சந்தைப்படுத்தல் / சர்வதேச தொடர்புகள் / பொருளியல் / வர்த்தகம் / விஞ்ஞானம் / விவசாயம் / வியாபார நிர்வாகம் தொடர்பான பட்டமொன்றைப் பெற்றிருத்தல். (குறித்த பதவிக்குரிதான பட்டம் மட்டுமே ஏற்புடையதாகும்) அத்துடன் இயைபுடைய துறையில் பட்டப் பின்படிப்புப் பட்டமொன்றைப் (முதுமானி) பெற்றிருத்தல் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனமொன்றின் இணை அங்கத்துவம், பதவியின் விடயத்துறைக்க இயைபாக மற்றும் ஆரம்பப் பட்டத்தின் பின் அரசாங்கத் திணைக்களம் / கூட்டுத்தாபனம் / சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் பதினைந்து (15) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.
2. பதவிக்கு இயைபான துறையில் தொழில்சார் பட்டய நிறுவனத்தின் முழுமையான அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல் மற்றும் அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் பதினைந்து (15) வருட கால அனுபவம் இருத்தல் வேண்டும்.

***உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)***

1. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்
2. பதவிக்கு இயைபான விடயத்துறையில் முகாமைத்துவ வகுதியில் (MM 1-1) பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடம் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**வயதெல்லை (3), (4) மற்றும் (5) பதவிகளுக்கு:** 35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

### (06) பணிப்பாளர் - தேசிய கரிம கட்டுப்பாட்டுப் பிரிவு (HM 1-1)

**வெற்றிடங்களின் எண்ணிக்கை (01)**

**தொழில் விபரம்**

பிரிவின் அனைத்து செயற்பாடுகள்/ முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் மற்றும் மேற்பார்வைக்கான கொள்கைகளை வகுத்து நிறுவுவதற்கு பொறுப்பு கூறுதல். உத்திகள், செயற்பாடுகள், வருடாந்த திட்டம், செயற்பாட்டுத் திட்டம் தயாரித்தல் மற்றும் தேசிய கரிம கட்டுப்பாட்டு அலகுக்கான வருடாந்த நிதி மற்றும் செயல்பாட்டு அறிக்கைகளை அவ்வப்போது தயாரித்தல், செயற்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைத்தல். தேசிய கரிம கட்டுப்பாட்டு பிரிவின் குழுக்கள் மற்றும் ஊழியர்களுக்கு பொறுப்புகளை வழங்குதல். ஆலோசனைக் குழு - தொழில்நுட்பம் மற்றும் தர நிலை சான்றுகளை தயாரித்தல்/ஒருங்கிணைத்தல். கரிம உற்பத்தியின் வளர்ச்சியை ஆதரித்தல் மற்றும் உள்நாட்டு மற்றும் சர்வதேச வர்த்தகத்தை எளிதாக்க கரிம சான்றிதழ்களை ஏற்றுக்கொள்வது தொடர்பான ஒப்பந்த ஒப்பந்தங்களை நிறுவுதல். தேசிய கரிம கட்டுப்பாட்டு பிரிவின் உள்நாட்டு/வெளிநாட்டு மற்றும் குழுக்களுடன் ஒருங்கிணைத்தல். சர்வதேச மட்டத்தில் அங்கீகாரம் பெறுதல். சட்ட விஷயங்கள், மேன்முறையீடுகள், முறைப்பாடுகள், தகராறுகள் போன்றவற்றில் முடிவுகளுக்குப் பொறுப்பு கூறல். தேசிய கரிம கட்டுப்பாட்டு பிரிவின் விதிமுறைகளுக்கு உடன்படுதல். நாட்டின் சான்றிதழ் கோரிக்கைகளை பூர்த்தி செய்ய சோதனை மற்றும் சான்றிதழ் முறைமைகளின் வளர்ச்சியை எளிதாக்குதல். தேசிய கரிம கட்டுப்பாட்டு பிரிவின் செயல்பாடுகளை செயல்படுத்த தேவையான வளங்களை வழங்குதல். தேசிய கரிம கட்டுப்பாட்டு அலகு மற்றும் அதன் சேவைகளை தேசிய மற்றும் சர்வதேச அளவில் ஊக்குவித்தல் மற்றும் எல்லா நேரங்களிலும் தேசிய கரிம கட்டுப்பாட்டு அலகை பிரதிநிதித்துவப்படுத்துதல்.

**தகைமைகள்:**

***வெளிவாரி விண்ணப்பாரிகள்:***

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் விஞ்ஞானம் / விவசாயம் அல்லது இயைபுடைய துறை தொடர்பான பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.) அத்துடன் இயைபுடைய துறையில் பட்டப் பின்படிப்புப் பட்டமொன்றைப் (முதுமாணி) பெற்றிருத்தல் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனமொன்றின் இணை அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல் மற்றும் ஆரம்பப் பட்டத்தின் பின் அரசாங்கத் திணைக்களம் / கூட்டுத்தாபனம் / சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் பதினைந்து (15) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

***உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)***

1. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்
2. பதவிக்கு இயைபான விடயத்துறையில் முகாமைத்துவ வகுதியில் (MM 1-1) பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடம் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**வயதெல்லை (6) பதவிகளுக்கு:** 35 வயதிற்குக் குறையாமலும் 50 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**சம்பள அளவு : (HM 1-1) (3), (4), (5) மற்றும் (6) பதவிகளுக்கு:**

ரூபா 140,640/- 15 x 4,100 = ரூபா 202,140/-

2025-03-25ஆம் திகதிய முகாமைத்துவ சேவை 01/2025ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் IIஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்.

2025ஆம் வருடத்தில் மாதாந்தம் செலுத்தப்படும் அடிப்படைச் சம்பளம் 105,399.00 ரூபாவாகும்.

2026-01-01ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் 123,019.00 ரூபா. (இதற்குப் புறம்பாக வாழ்க்கைச் செலவுப் படி 17,800.00 ரூபா மற்றும் பதவிக்கு இயைபாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள்)

**ஏனைய அனுகூலம் : (3), (4), (5) மற்றும் (6) பதவிகளுக்கு:**

2016-10-27ஆம் திகதிய பொது நிர்வாகத்துறை திணைக்களத்தின் (PED) 1/2025(i) சுற்றுநிருபம் மற்றும் இயைபுடைய திருத்தத்தின் பிரகாரம் வாகனமொன்று வழங்கப்படும். (HM 2-1 மற்றும் HM 1-1 வகுதிகளின் பதவிகளுக்கு மட்டும்)

**தெரிவு செய்யும் முறை: (3), (4), (5) மற்றும் (6) பதவிகளுக்கு:**

நியமன அதிகாரியினால் (EDB) நியமிக்கப்படும் நேர்முகத்தேர்வுக் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம்.

### (07) உதவிப் பணிப்பாளர் (MM 1-1)

**வெற்றிடங்களின் எண்ணிக்கை (03)**

**தொழில் விபரம்**

வர்த்தக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை தயாரித்தல், செயற்படுத்துதல் மற்றும் மதிப்பீடு, வழங்கல் அபிவிருத்தி வாய்ப்புகளை இனங்காணுதல், சிறிய மற்றும் மத்திம அளவான நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல், செயற்படுத்துதல் மற்றும் கண்காணித்தல். ஏற்றுமதியாளர்களைத் தாக்கும் பாரிய பொருளாதார பிரச்சினைகளுக்கு இயைபாக ஆய்வுகளை மேற்கொள்ளல் மற்றும் அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு கொள்கை ரீதியாக அடுத்த கட்ட நகர்வுகளை சிபாரிசு செய்தல், பொருள் உற்பத்தி, தரத்தை உயர்த்துதல் மற்றும் பொதியிடலை அபிவிருத்தி செய்தல் போன்றவற்றுக்குத் தேவையான ஆலோசனை சேவைகளை வழங்குதல். உயர் முகாமைத்துவத்தினால் ஒப்படைக்கப்படும் ஏனைய கடமைகள்.

**தகைமைகள்:**

***வெளிவாரி விண்ணப்பதாரிகள்:***

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சந்தைப்படுத்தல் / சர்வதேச தொடர்புகள் / பொருளியல் / வர்த்தகம் / விஞ்ஞானம் / விவசாயம் / வியாபார நிர்வாகம் அல்லது இயைபுடைய துறையில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் இயைபுடைய துறையில் பட்டப் பின்படிப்புப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் பட்டத் தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் குறைந்தபட்சம் ஒரு (01) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

***உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)***

1. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்
2. பதவிக்கு இயைபான விடயத்துறையில் கனிஷ்ட முகாமைத்துவ வகுதியில் (JM) பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடம் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

### (08) உதவிப் பணிப்பாளர் - மனித வளம் மற்றும் நிர்வாகம் (MM 1-1)

**வெற்றிடங்களின் எண்ணிக்கை (03)**

**தொழில் விபரம்**

சபையின் மனிதவளக் கொள்கைகளை செயற்படுத்துதல். பயிற்சி/பணியாளர் அபிவிருத்தித் தேவைகளை அடையாளம் காணுதல் - உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மற்றும் மனிதவள அபிவிருத்திக்காக திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை செயல்படுத்துதல். ஆட்சேர்ப்பு, பதவி உயர்வுகள், சம்பள உயர்வுகள், ஊழியர் சேமலாப நிதி (EPF), ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி (ETF) தொடர்பான விஷயங்களைக் கையாளுதல். செயல்திறன் தடைதாண்டல் பரீட்சைகள், சம்பள திருத்தங்கள் போன்றவற்றைக் கையாளுதல். ஒழுக்க விஷயங்கள், விடுமுறை, வருகை மற்றும் மேலதிக நேரம், மருத்துவ உதவித் திட்டம் மற்றும் ஏனைய நலன்புரி விஷயங்களைக் கையாளுதல். நிறுவனத்தின் நிர்வாக செயற்பாடுகளை எளிதாக்குதல். பாதுகாப்பு நடவடிக்கைகளை (தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்கள்) கண்காணித்தல் மற்றும் ஒருங்கிணைத்தல். வாடகை/குத்தகை ஒப்பந்தங்களைப் புதுப்பித்தல் மற்றும் காப்பீட்டுத் தொகை உள்ளிட்ட அலுவலக கட்டிட வாடகைகளை செலுத்துவது தொடர்பான விஷயங்களைக் கையாளுதல். தொலைபேசி, நீர் மற்றும் மின்சார விநியோகத்தைப் பராமரிப்பதைக் கண்காணித்தல். அஞ்சல் மற்றும் பொருட்களின் போக்குவரத்து தொடர்பான விஷயங்கள். தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களில் வழங்கல் நடவடிக்கைகளைத் திட்டமிடுதல் மற்றும் செயற்படுத்துதல். ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் (EDB) போக்குவரத்து பிரிவை மேற்பார்வை செய்தல் மற்றும் வாகனத் தொகுதியை பராமரித்தல். உயர் முகாமைத்துவத்தினால் ஒப்படைக்கப்படும் ஏனைய கடமைகள்.

**தகைமைகள்:**

***வெளிவாரி விண்ணப்பதாரிகள்:***

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் மனிதவள முகாமைத்துவம் / அரச நிர்வாகம் / அரச முகாமைத்துவம் / வியாபார நிர்வாகம் (மனிதவள முகாமைத்துவம் தொடர்பில் விசேடம்) / முகாமைத்துவம் (மனிதவள முகாமைத்துவம் தொடர்பில் விசேடம்) / வர்த்தகம் (B.Com) பட்டம் மற்றும் அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் குறைந்தபட்சம் ஒரு (01) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

***உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)***

1. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்
2. பதவிக்கு இயைபான விடயத்துறையில் கனிஷ்ட முகாமைத்துவ வகுதியில் (JM) பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடம் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

### (09) உதவிப் பணிப்பாளர் - கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு (MM 1-1)

**வெற்றிடங்களின் எண்ணிக்கை (01)**

**தொழில் விபரம்**

மூலோபாயத் திட்டத்தைத் தயாரிப்பதில் கொள்கை மற்றும் மூலோபாய திட்டமிடல் பிரிவுக்கு உதவுதல். பிரிவுகளால் நடத்தப்படும் திட்டங்கள் அல்லது செயற்பாடுகளின் Gantt விளக்கப்படங்களை பகுப்பாய்வு செய்து முன்னேற்ற பகுப்பாய்வு பிரிவுகளுக்குத் தெரிவித்தல். கொடுக்கப்பட்ட திகதிகளில் மூலோபாயத் திட்டத்தின் செயற்பாடுகள் அடையப்படாதபோது அதைக் கண்காணித்து அதிகாரிகளுக்குத் தெரிவித்தல். வெளிநாட்டு வர்த்தக கண்காட்சிகள் மற்றும் பயிற்சித் திட்டங்களின் முன்னேற்றத்தைக் கண்காணித்து அறிக்கை செய்தல். பயிற்சித் திட்டங்களின் செயல்திறனை மதிப்பிடுதல் மற்றும் நிர்வாகத்திற்குத் தெரிவித்தல். வர்த்தக கண்காட்சி பிரிவின் அனைத்து முகாமைத்துவ நடவடிக்கைகளையும் திறமையாகவும் திறம்படவும் செயல்படுத்துவதில் மனிதவள முகாமைத்துவ பணிப்பாளருக்கு (HRM) உதவுதல்.

**தகைமைகள்:**

***வெளிவாரி விண்ணப்பதாரிகள்:***

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் செயற்றிட்ட முகாமைத்துவம் / பொருளியல் / அபிவிருத்தி கற்கை / கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு / புள்ளிவிபரம் மற்றும் ஆராய்ச்சி தொடர்பான பட்டம் மற்றும் அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் குறைந்தபட்சம் ஒரு (01) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

***உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)***

1. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்
2. பதவிக்கு இயைபான விடயத்துறையில் கனிஷ்ட முகாமைத்துவ வகுதியில் (JM) பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடம் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**வயதெல்லை (7), (8) மற்றும் (9) பதவிகளுக்கு:** 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**சம்பள அளவு :** (MM 1-1) (7), (8) மற்றும் (9) பதவிகளுக்கு:

ரூபா 91,690/- 10 x 2,480 15 x 3,450 = ரூபா 168,240/-

2025-03-25ஆம் திகதிய முகாமைத்துவ சேவை 01/2025ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் IIஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்.

2025ஆம் வருடத்தில் மாதாந்தம் செலுத்தப்படும் அடிப்படைச் சம்பளம் 71,730.00 ரூபாவாகும்.

2026-01-01ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் 81,710.00 ரூபா. (இதற்குப் புறம்பாக வாழ்க்கைச் செலவுப் படி 17,800.00 ரூபா மற்றும் பதவிக்கு இயைபாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள்)

**தெரிவு செய்யும் முறை :** (7), (8) மற்றும் (9) பதவிகளுக்கு:

நியமன அதிகாரியினால் (EDB) நியமிக்கப்படும் நேர்முகத்தேர்வுக் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு மற்றும் / அல்லது எழுத்துமூல போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில்.

### (10) ஏற்றுமதி மேம்பாட்டு அதிகாரி (JM 1-1)

**வெற்றிடங்களின் எண்ணிக்கை (18)**

**தொழில் விபரம்**

பிரிவின் / அலகின் செயற்பாட்டு வேலைகளை உயர் அதிகாரிகளின் கண்காணிப்பின் கீழ் திட்டமிடல் மற்றும் செயற்படுத்துதல், இயைபுடைய உற்பத்தித் துறையோடு தொடர்புடைய செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல், இயைபுடைய துறைக்கான தரவு / தகவல்களை நாளது தரவேற்றம் செய்தல், பொருட்கள் மற்றும் சேவை ஏற்றுமதியை மேம்படுத்துதல் மற்றும் அது தொடர்பான வேறு வேலைகளில் ஈடுபடுதல்.

**தகைமைகள்:**

***வெளிவாரி விண்ணப்பதாரிகள்:***

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சந்தைப்படுத்துதல் / சர்வதேச தொடர்பு / பொருளியல் / வணிகம் / விஞ்ஞானம் / விவசாயம் / வியாபார நிர்வாகம் அல்லது இயைபுடைய துறையில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

***உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)***

1. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்
2. பதவிக்கு இயைபான விடயத்துறையில் முகாமைத்துவ உதவியாளர் வகுதி IIஆம் வகுப்பு பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடம் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

### (11) பெறுகை அதிகாரி (JM 1-1)

**வெற்றிடங்களின் எண்ணிக்கை (01)**

**தொழில் விபரம்**

நிறுவனத்தின் தொடர்ச்சியான செயல்பாட்டிற்கான அனைத்து வழங்கல் மற்றும் சேவைகளை வழங்குதல். சபையின் நடைமுறைகள் மற்றும் ஏனைய தொடர்புடைய விதிமுறைகளுக்கு இணங்க நிறுவனத்தின் உள் வாடிக்கையாளர்கள் மற்றும் வெளிப்புற நிறுவனங்களுடன் ஒருங்கிணைத்தல், பெறுகைப் பிரிவு ஒருங்கிணைப்பு / இணைப்பு பிரிவாக செயற்படுவதை உறுதி செய்தல்.

**தகைமைகள்:**

***வெளிவாரி விண்ணப்பதாரிகள்:***

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் வழங்கல் முகாமைத்துவம் / வசதிகள் (Logistics) முகாமைத்துவம் / தொடர் வழங்கல் முகாமைத்துவம் தொடர்பான பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)

1. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்
2. பதவிக்கு இயைபான விடயத்துறையில் முகாமைத்துவ உதவியாளர் வகுதி IIஆம் வகுப்பு பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடம் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

### (12) கணனி நிகழ்ச்சித்திட்டவியலாளர் (COMPUTER PROGRAMMER) (JM 1-1)

**வெற்றிடங்களின் எண்ணிக்கை (01)**

**தொழில் விபரம்**

நிறுவனத்தின் சகல பிரிவு / அலகுகளின் கணனி செயற்பாடுகளுக்கு இயைபான கணனி நிகழ்ச்சித் திட்டங்களை அபிவிருத்தி செய்தல், அந்த நிகழ்ச்சித்திட்டங்களைப் பராமரித்தல் மற்றும் தேவையானபோது புதிய கணனி நிகழ்ச்சித் திட்டங்களை நாளது தரவேற்றம் செய்தல்.

**தகைமைகள்:**

***வெளிவாரி விண்ணப்பதாரிகள்: (பின்வரும் 1 அல்லது 2 அல்லது 3 அல்லது 4)***

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் கணனி விஞ்ஞானம் / பொறியியல் / தகவல் தொழில்நுட்பம் / தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.
2. மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்பம் / தொழிற் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறன் தகைமையில் (NVQ) 7ஆம் மட்டத்திற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.
3. மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்பம் / தொழிற் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறன் தகைமையில் (NVQ) 6ஆம் மட்டத்திற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் மற்றும் கூட்டுத்தாபனம், நியதிகள் சபை / நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் இயைபுடைய விடயத்துறையில் தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடகால அனுபவம்.
4. மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்பம் / தொழிற் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறன் தகைமையில் (NVQ) 5ஆம் மட்டத்திற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் மற்றும் கூட்டுத்தாபனம், நியதிகள் சபை / நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் இயைபுடைய விடயத்துறையில் தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் குறைந்தபட்சம் பத்து (10) வருடகால அனுபவம்.

***உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)***

1. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்
2. பதவிக்கு இயைபான விடயத்துறையில் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்) IIஆம் வகுப்பு பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடம் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

### (13) மனிதவளம் மற்றும் நிர்வாக அதிகாரி (JM 1-1)

**வெற்றிடங்களின் எண்ணிக்கை (02)**

**தொழில் விபரம்**

நிறுவனத்தின் தொடர்ச்சியான செயற்பாட்டிற்கான அனைத்து வழங்கல் மற்றும் சேவைகளை வழங்குதல். சபையின் நடைமுறைகள் மற்றும் ஏனைய தொடர்புடைய விதிமுறைகளுக்கு இணங்க நிறுவனத்தின் உள் வாடிக்கையாளர்கள் மற்றும் வெளிப்புற நிறுவனங்களுடன் ஒருங்கிணைத்தல், பெறுகைப் பிரிவு ஒருங்கிணைப்பு / இணைப்பு பிரிவாக செயற்படுவதை உறுதி செய்தல்.

**தகைமைகள்:**

***வெளிவாரி விண்ணப்பதாரிகள்:***

நிறுவன செயற்பாடுகள் தொடர்பான பணிகளை மேற்கொள்வதில் உதவுதல். ஊழியர் அபிவிருத்தி மற்றும் நலன்புரிகளில் பங்கேற்றல், தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களின் வழங்கல் தேவைகளைத் திட்டமிட்டு செயற்படுத்துதல், ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் வாடகை/ மின்சாரம்/ நீர்/ தொலைபேசி கட்டணங்களைத் தீர்ப்பது தொடர்பான விடயங்களைக் கையாளுதல். தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களில் பாதுகாப்பு சேவைகள் தொடர்பான விஷயங்களைக் கையாளுதல். மனிதவளத் துறையில் சரியான உள்ளக நிர்வாகத்தை உறுதி செய்தல். ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் மனிதவளக் கொள்கை மற்றும் மனிதவள உத்திகளை செயல்படுத்துவதில் மேலாளருக்கு (HR) உதவுதல். ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுகள், விடுமுறை, வருகை மற்றும் மேலதிக நேரம் ஆகியவற்றைக் கையாளுதல். ஒவ்வொரு பணியாளருடனும் தொடர்புடைய ஏதேனும் மாற்றம் ஏற்படும் போது தனிப்பட்ட கோப்புகளைப் புதுப்பித்தல். மனிதவள பயிற்சி மற்றும் அபிவிருத்தி தொடர்பான விஷயங்கள், ஒழுக்க விசாரணைகள் தொடர்பான விஷயங்களைக் கையாளுதல். உயர் முகாமைத்துவத்தினால் ஒப்படைக்கப்படும் ஏனைய கடமைகள்.

**தகைமைகள்:**

***வெளிவாரி விண்ணப்பதாரிகள்:***

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் மனிதவள முகாமைத்துவம் / அரச நிர்வாகம் / அரச முகாமைத்துவம் / வியாபார நிர்வாகம் (மனிதவள முகாமைத்துவம் தொடர்பில் விசேடம்) / முகாமைத்துவம் (மனிதவள முகாமைத்துவம் தொடர்பில் விசேடம்) / வர்த்தகம் (B.Com) பட்டம்.

***உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)***

1. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்
2. பதவிக்கு இயைபான விடயத்துறையில் முகாமைத்துவ உதவியாளர் IIஆம் வகுப்பு பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடம் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**வயதெல்லை (10), (11), (12) மற்றும் (13) பதவிகளுக்கு:** 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**சம்பள அளவு:** (JM 1-1) (7), (8) மற்றும் (9) பதவிகளுக்கு:

ரூபா 72,650/- 10 x 1,360 18 x 2,040 = ரூபா 122,970/-

2025-03-25ஆம் திகதிய முகாமைத்துவ சேவை 01/2025ஆம் இலக்க சுற்று நிருபத்தின் IIஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்.

2025ஆம் வருடத்தில் மாதாந்தம் செலுத்தப்படும் அடிப்படைச் சம்பளம் 58,615.00 ரூபாவாகும்.

2026-01-01ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் 65,633.00 ரூபா. (இதற்குப் புறம்பாக வாழ்க்கைச் செலவுப் படி 17,800.00 ரூபா மற்றும் பதவிக்கு இயைபாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள்)

**தெரிவு செய்யும் முறை:** (10), (11), (12) மற்றும் (13) பதவிகளுக்கு:

நியமன அதிகாரியினால் (EDB) நியமிக்கப்படும் நேர்முகத் தேர்வுக் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு மற்றும் / அல்லது எழுத்துமூல போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில்.

மேற்கூறிய பதவிகளுக்கான சகல நியமனங்களுக்கும் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் என்பவற்றிற்கு உரிமை உள்ளது என்பதுடன் பின்வரும் வகையில் பங்களிப்பு செய்யப்படும்.

EPF - ஊழியர் 10%, சபை - 15% மற்றும் ETF - சபை 3%

நீங்கள் தகுதி வாய்ந்தவரானால் **2025-11-13**ஆம் திகதி அல்லது அதற்கு முன் விண்ணப்பிப்பதற்கு நீங்கள் அழைக்கப்படுகின்றனர்.

விண்ணப்பப் படிவத்தை www.srilankabusiness.com எனும் இணையதளத்தில் ("Announcements" எனும் பகுதியின் கீழ்) பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவத்தின் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் மற்றும் குறித்த சான்றிதழ்களின் பிரதிகளை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தலைவர்/ பிரதான நிறைவேற்று அதிகாரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். உரிய படிவத்தில் (ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் விண்ணப்பப் படிவம்) சமர்ப்பிக்கப்படாத மற்றும் உரிய சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படாத மற்றும் முழுமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அரச துறையில் சேவையாற்றுபவர்கள் விண்ணப்பப் படிவங்களை தமது நிறுவனத்தின் தலைமையின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். அந்த விண்ணப்பப் படிவத்தின் மேலதிக பிரதியொன்றை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு முன்னர் தலைவர் / பிரதி நிறைவேற்று அதிகாரிக்கு அனுப்புமாறு விண்ணப்பதாரர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.


**தலைவர் / பிரதான நிறைவேற்று அதிகாரி,**

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை**

**NDB – EDB டவர், இல. 42, நவம் மாவத்தை, கொழும்பு-02.**

**தொலைபேசி: 011-2300700 தொலைநகல்: 011-2300715**

**இணையதளம்: www.srilankabusiness.com**